28.11.2023

STC.62/2021

PW-1, பிரிதிவிராஜ்

எதிரி தரப்பில் கு.வி.

நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். இந்த நீதிமன்றத்தில் என்னுடைய பெயரில் எத்தனை காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இரண்டு வழக்கு. இந்த வழக்கில் 1,50,000/- ம் மற்றொரு வழக்கில் 7,00,000 ம் கேட்டு போட்டுள்ளேன். எதிரியை 10 வருடமாக தெரியும். எனக்கும் எதிரிக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை. இந்த ஒரு வழக்கு மட்டும் தான் உள்ளது. எதிரி என்னிடம் தனது குடும்ப செலவுக்காக பணம் கேட்டார். அதற்காக கொடுத்தேன். வேறு காரணங்கள் எதுவும் இல்லை. என்னுடைய வீட்டில் வைத்து தொகையை கொடுத்தேன் என்றால் சரிதான். நான் ரூ.1,50,000/- ஐ என் வீட்டில் இருந்து தான் எடுத்து கொடுத்தேன். நான் கொடுத்த பணத்தை விவசாயத்தின் மூலம் வந்த வருமானத்தை இருப்பு வைத்திருந்ததை சஞ்சய் என்று எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியிருக்கிறேனா என்றால் அது பற்றிய ஞாபகம் தற்போது இல்லை. என்னிடம் அவர் கைமாற்றாக கேட்டதால் வட்டி எதுவும் நான் வாங்கவும் இல்லை. பேசிக் கொள்ளவும் இல்லை. நான் 05.11.2020 ம் தேதி எதிரிக்கு பணம் கொடுத்தேன். அப்போது நானும் எனது மனைவியும் வீட்டில் இருந்தோம். என்னுடைய மனைவி முன்பாக தான் நான் அந்த பணத்தை கொடுத்தேன் என்றால் சரிதான். அன்றைய தேதியில் பணம் வாங்கும் போதே செக்கை 18.11.2020 தேதியிட்டு கொடுத்தார். எதிரி பச்சை மையினால் கையொப்பம் போட்டு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தேதியும் தொகையும் ஒரு பேனாவாலும் பெயர் மற்றும் வேறு விபரங்கள் வேறு ஒரு பேனாவாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்தான் எழுதிக் கொடுத்தார். ஒரு மாதத்திற்கு முன்பு இருந்தே தொகை கேட்டுக் கொண்டிருந்தார். கையெழுத்து மற்றும் பூர்த்தி செய்வது அனைத்தும் என் முன்பாக தான் செய்ய வேண்டும் என்று சொன்னேன். அதேபோல் பூர்த்தி செய்தும் கொடுத்தார். நாங்கள் இருவரும் எங்கள் கட்சி அலுவலகத்தில் சந்தித்துக் கொள்வோம். நான் அவரை பற்றி விசாரிக்காமலேயே அவருக்கு தொகை கொடுத்தேன். நான் தொகை கொடுத்த தேதியும் அவர் காசோலையில் இட்ட தேதிக்கும் இடையே 13 தினங்கள் தான் இடைவெளி உள்ளது என்று சொன்னால் சரிதான். 18 ம் தேதி நான் எதிரியிடம் காசோலை தொகையை கொடுக்கிறீர்களா வசூலுக்கு போடவா என எங்கள் கட்சி அலுவலகத்தில் வைத்து கேட்டேன். ஆனால் ஒரு வாரமாக நான் அவரை சந்தித்த போதெல்லாம் தருவதாக சொல்லி காலம் தாழ்த்தினார். அதன் பிறகு நான் வசூலுக்கு போட்டேன். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின் அவரை சந்திக்கவில்லை. நான் சொன்னது போல் எதிரிக்கு எந்த தொகையும் தரவில்லை என்றாலும் கட்சி அலுவலகத்தில் அவரது நண்பர்களிடம் கொடுத்து

வைத்திருந்த காசோலையை எடுத்துச் சென்று நான் பணம் கொடுத்ததாக சொல்லி பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் கையொப்பம் ஒரு மையிலும் காசோலை தேதி மற்றும் எண்ணால் எழுதப்பட்ட தொகையும் வேறு மையினாலும் என்னுடைய பெயரும் எழுத்தால் எழுதப்பட்ட தொகை வேறு மையினாலும் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது என்று சொன்னால சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு நான் கொடுத்ததாக சொல்லும் பணம் எந்த வகையில் எனக்கு வருமானமாக வந்தது என்ற விபரத்தை சொல்லாமல் போடப்பட்ட மோசடியான வழக்கு என்றால் சரியல்ல.